

தி.மு.க.வை வளர்த்தவர்களில் ஒருவரும் கழக மூத்த முன்னோடியும் மேனாள் அமைச்சரும் ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தின் செயலாளருமாக இருந்து மறைந்த புரவலர் அன்பில் தர்மலிங்கம் அவர்களின் 32 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, திருச்சி கலைஞர் அறிவாலயம் அருகில் உள்ள அன்பில் சிலைக்கு பள்ளி கல்வித்துறை அமைச்சரும் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்வில் பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் லியோனி, மதிவாணன் அரங்கநாதன், சேகரன், சபியுல்லா, மோகன் உள்ளிட்ட கழகத்தில் ஏராளமானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



தாம்பரம் சட்டமன்ற தொகுதி புனிததோமையார் மலை ஒன்றியம் திருவஞ்சேரி ஊராட்சி 22.48 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய ஆரம்ப பள்ளியில் புதியதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகள் திறப்பு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., அவர்கள் கலந்து கொண்டு திறந்து வைத்தார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர் ஜி.கே. விவேகானந்தன் ஏ ரவி, ஊராட்சி ஒன்றிய குழுவின் தலைவர் சங்கீதா பாரதிராஜன், ஒன்றிய குழு துணை தலைவர் பா.பிரசாத், அம்சவேணிகுணா, அமுதா வேல்முருகன் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

## உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியத்தில்

# 9.57 லட்சம் பயனாளிகளுக்கு ரூ.886.94 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் சி.வெ.கணேசன் தகவல்!

சென்னை, மார்ச் 7 -

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள்சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம், தமிழ்நாடு சமையல் மற்றும் உணவகத் தொழிலாளர்கள் நல வாரியம், தமிழ்நாடு பாதையோர வணிகர்கள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நல வாரியம் ஆகிய மூன்று அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களின் கூட்டம் இன்று (06.03.2025) சென்னை தேனாம்பேட்டை தொழிலாளர் நல வாரிய கருத்தரங்க கூடத்தில் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சி.வெ.கணேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் நல வாரிய செயலாளர் முனைவர் ஆ.திவ்வியநாதன் வரவேற்றார்.

அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு வழங்கி அவர்களின் நலன் காப்பதில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு, கண்கண்ணாடி, இயற்கை மரணம், விபத்து மரணம், ஈமச்சடங்கு, விபத்து ஊனம் மற்றும் மாதாந்திர ஓய்வூதியம் போன்ற பல்வேறு நல திட்ட உதவிகளை 19 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள் வாயிலாக தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.

தமிழ்நாடு உடலுழைப் புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்புமற்றும் நல வாரியம் மற்றும் 18 இதர நலவாரியங்களில் வழங்கப்பட்ட மாதாந்திர ஓய்வூதியம் ரூ.1000லிருந்து ரூ.1,200 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்ற நாள் முதல் 31.01.2025 வரை19 அமைப்புசாரா நல வாரியங்களில் 6,00,860 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர்.



தமிழ்நாடு சமையல் மற்றும் உணவகத் தொழிலாளர் நல வாரியத்தில் 27,181 பயனாளிகளுக்கு ரூ.31.58 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், தமிழ்நாடு பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகள், நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் 8,45,120 பயனாளிகளுக்கு ரூ.483.90 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வரசு பொறுப்பேற்ற நாள் முதல் 31.01.2025 வரை9,57,361 பயனாளிகளுக்கு ரூ.886.94 கோடி மதிப்பபீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக 60 வயது பூர்த்தியடைந்த 1,95,942 ஓய்வூதியதாரர்களுக்கு மாதந்தோறும் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றன.

இக்கூட்டத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அரசு செயலாளர் திரு.கொ.வீரராகவராவ் இ.ஆ.ப, அவர்கள் தொழிலாளர் ஆணையர் திரு.சி.அ.ராமன் இ.ஆ.ப அவர்கள், வேலையளிப்போர் பிரதிநிதிகள், தொழிலாளர்கள் தரப்பு பிரதிநிதிகள் மற்றும் தொழிலாளர் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இறுதியாக வாரிய நிர்வாக அலுவலர் திரு.A.ஞான சம்மந்தம் நன்றி தெரிவித்தார்.

## குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில்

# புதிய தொழில் முனைவோர்களுக்கு ரூபாய் 6 கோடியில் மானியத்துடன் கூடிய வங்கிக் கடனுதவிகள்!

## அருண் நேரு எம்.பி. வழங்கினார்.

பெரம்பலூர், மார்ச் 7 -

தமிழ்நாடு முதல்வர் அவர்கள் தொழில் புதிய , புதியதொழில் திட்டங்களை தமிழகம் முழுவதும் கொண்டு வந்து வேலை வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தி வாழ்வாதாரத்திற்கு வழி காட்டியாக இருக்கிறார்

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி, வேலை வாய்ப்பு, பெண்கள், இளைஞர்கள், தொழில் முனைவோர்களின் பங்களிப்பை அதிகரித்தல் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் திருச்சி சமயபுரம், ரெட்டியார் மஹாலில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் நடைபெற்ற குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கான சிறப்பு முகாமை பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண் நேரு தொடங்கி வைத்து, பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டு, புதிய தொழில் முனைவோர்களுக்கு ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் மானியத்துடன் கூடிய வங்கி கடனுதவிகளை வழங்கி விழா பேருரையாற்றினார்.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக மூலதன முதலீட்டு மானியம், மின்சார மானியம், பிணையில்லாத வங்கி கடனுதவிக்கான வட்டி மானியம், தரச் சான்று மானியம் வழங்கப் பட்டு வருகிறது

. மேலும், புதிய தொழில் முனைவோர்களுக்கு, வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம், பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத்திட்டம்,

அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் , பிரதமரின் உணவு பதப்படுத்தும் தொழில்களை முறைபடுத்தும் திட்டம், கலைஞரின் கைவினைத் திட்டம் உள்ளிட்ட மானியத்துடன் கூடிய வங்கி கடன் திட்டங்கள் மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில் இந்த திட்டங்கள் குறித்து படித்த இளைஞர்கள் மற்றும் புதிய தொழில் முனைவோர்களுக்கு அறிந்திடும் வகையிலும் ஏற்கனவே தொழில் நிறுவனங்கள் நடத்தி வருபவர்கள் தங்களது நிறுவனங்களின் வளர்ச்சிக்காகவும் இந்த சிறப்பு முகாம் நடைபெற்றது.

இம்முகாமில், 300 புதிய தொழில் முனை வோர்களுக்கு ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் மானியத்துடன் கூடிய வங்கி கடன் உதவிகளையும், தாட்கோ சார்பில் சுற்றுலா வாகனத்திற்கான கடனுதவிகளையும், பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண் நேரு வழங்கினார்.

மேலும் மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் மானியத்துடன் கூடிய வங்கி கடனுதவி பெற்று வெற்றிகரமாக தொழில் நடத்தி வரும் நிறுவனத்தினர் தங்களது அனுபவங்களை புதிய தொழில் முனைவோர்களுக்கும், பொதுமக்களுக்கும் எடுத்துரைத்தனர்.

முன்னதாக, தாட்கோ, மாவட்ட தொழில் மையம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம், தேசிய சிறுதொழில் கழகம், புத்தாக்க தொழில்கள், தேசிய வாழை ஆராய்ச்சி நிறுவனம் உள்ளிட்ட துறைகளின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும், மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்குவது தொடர்பாக அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண் நேரு மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பார்வையிட்டனர்.

இவ்விழாவில், சட்டமன்ற உறுப்பினர்கள் சீ.கதிரவன், ந.தியாகராஜன், எஸ்.ஸ்டாலின் குமார், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் மா.இராமலிங்கம், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மண்டல மேலாளர் கோ.ஸ்ரீராம், பாரத ஸ்டேட் வங்கி மண்டல மேலாளர் சு.மதன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் முருகேசன், சமயபுரம் அறங்காவல் குழு தலைவர் இளங்கோவன் முன்னாள் தலைவர் ராஜசேகர் சார்லஸ் வழக்கறிஞர் செந்தில்குமார், ராஜேஷ் மாவட்ட குறு மற்றும் சிறுதொழில் சங்க தலைவர் ராஜப்பா, துணைப்பதிவாளர் (பால்வளம்) கோ.நாகராஜ் சிவக்குமார், தாட்கோ மேலாளர் ரெ.விஜயகுமார், மாவட்ட செயல் அலுவலர் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் செ.ஜெயபிரகாஷ், தேசிய மாவட்ட தொழில் மைய உதவி இயக்குநர்கள் கோ.எஸ்தர்ராணி, கோ.கிரீசன் மற்றும் வங்கியாளர்கள், தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள், அரசு அலுவலர்கள், தொழில் சங்க பிரதிநிதிகள், புதிய தொழில் முனைவோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. – ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. – கே.ஏழுமலை பங்கேற்பு!

# தியாகராயர் நகர் 132 வது வட்டத்தில் முதல்வர் பிறந்த நாள் தொடர் நிகழ்வுகள்!

## வட்டச் செயலாளர் ந.மோ.முரளி அறிவிப்பு!

சென்னை, மார்ச் 7 -

தியாகராயர் நகர் - 132 வது வட்டக் கழகச் செயலாளர் ந.மோ.முரளி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழக முதல்வர் கழகத் தலைவர் அவர்களின் 72 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தியாகராயர் நகர் மேற்கு பகுதி 132 வது வட்டத்தில் தொடர் நிகழ்வுகள் 9.3.2025 - ஞாயிற்றுக்கிழமை - காலை 11 மணி -

காமராஜர் காலனி ஆறாவது தெருவில் W பிளாக் அருகில் பொதுமக்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சி - ஏற்பாடு - ஏன் நோபல் ஆர். சேகர் கார்த்திக் -

காமராஜர் காலனி ஆறாவது தெரு முத்து மாரியம்மன் கோவில் அருகில் கலைஞர் நற்பணி மன்றம் பெயர் பலகைதிறப்புவிழாமற்றும் பொது மக்களுக்கு உணவு வழங்கும் விழா - நிகழ்ச்சி ஏற்பாடு எம்பர்மா -

காமராஜர் காலனி ஆறாவது தெரு சி பிளாக் அருகில் பொதுமக்களுக்கு உணவு வழங்கும் விழா - நிகழ்ச்சி ஏற்பாடு து.ஆனந்தராஜ்

அஜீஸ் நகர் முதியோர் இல்லம் உணவு வழங்கும் நிகழ்ச்சி நிகழ்ச்சிஏற்பாடு எம் ரவி பிரசாத் அனைத்து நிகழ்ச்சிகளிலும் சென்னை தென்மேற்குமாவட்டகழக செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ. தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர்ஜே.கருணாநிதி, தியாகராய நகர் பகுதி கழகசெயலாளர் கே.ஏழுமலை ஆகியோர் கலந்து கொண்டுநல்லதிட்டஉதவிகள்வழங்குவர்எஸ்மோகன் , கோடம்பாக்கம் மு.சத்யா , வட்டக் கழக செயலாளர் ந.மோ.முரளி , கார்த்திகா பாஸ்கர் மற்றும் மாவட்ட பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள் , மகளிர்அணி சகோதரிகள் கலந்து கொண்டுசிறப்பிக்கின்றனர்.

இவ்வாறு அவர்தெரிவித்துள்ளார்.

## முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு

# தேவகோட்டையில் இலவச மருத்துவ முகாம்.

## பெரி.பாலா தலைமையில் 300-க்கும் மேற்பட்டோர் சிகிச்சை

சிவகங்கை மார்ச் 7

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகர் மற்றும் ஒன்றிய கழகங்கள் சார்பில் முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் ஜெ... ஜாகிர் உசேன் ஏற்பாட்டின் பேரில் 23 வது வட்டத்தில் இலவச பொது மருத்துவ முகாம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்த மருத்துவமுகாம் தேவகோட்டை நகர்கழகசெயலாளர் பெரி .பாலா தலைமையில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் வழக்கறிஞர்பூபால சிங்கம் ,லெ.மு.ரவிச்சந்திரன் பொதுக்குழு உறுப்பினர் ஜெ.மதார்சேட் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. முன்னதாக அவர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு கேக் வெட்டி முதல்வர் அறிவித்த உறுதிமொழியை கூற கூடியிருந்த வர்கள் உறுதி மொழியை ஏற்றார்கள். இந்த நிகழ்ச்சியில் நகர் நிர்வாகிகள் பொருளாளர் அன்புச்செல்வன், இரா கருணாநிதி மனோகரன், இலக்கிய அணி அழகை யா ,மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் சரவணன், அப்துல் ஜபார், எழில்மாறன், நகர்மன்றஉறுப்பினர் கள் பிச்சை யம்மாள்,மனோ பிரகாஷ் கணேசன், மற்றும் சேவியர் ,அப்துல் ஜபார் இலக்கிய அணி ஆண்டனி சேவியர்,சொர்ணலிங்கம், பெரியசாமி, எம் ஜாகிர் உசேன் ,சேக் அப்துல்லா, ஷங்கர்,குமரேசன்,பாண்டியன், மும்முடி நாதன் செந்தில்குமார், ஆகியோர் கலந்து கொண்டார்கள். திருவேகம் பத்துஅரசு மருத்துவமனை சார்பில் வட்டார மருத்துவ அலுவலர் கலைச் செல்வன், மருத்துவர்கள் அரவிந்த் குமார் , சிவசங்கரி , மகேஸ்வரி அரவிந்த் குமார் மற்றும் மருத்துவ அலுவலர்கள் ஆகியோர் மருத்துவசிகிச்சை அளித்தார்கள். முகாமிற்கான ஏற்பாடுகளை முன்னால் நகர் மன்ற உறுப்பினர் ஜாகிர் உசேன் தலைமையில் வட்டக் கழக நிர்வாகிகள் செய்திருந்தார்கள் .300க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மருத்துவ முகாமில் பயன் பெற்றார்கள். இந்த முகாமில் கண் மருத்துவம், பொது மருத்துவம், சர்க்கரை நோய், பல் மருத்துவம், போன்ற வற்றிக்கான ஆலோசனைகள் மேற்கொள்ளப் பட்டது.



மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் முதலமைச்சர் தலைவர் அவர்களின் 72 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில், 15 வது வட்டம் பழையநாபாளையம் அண்ணா காப்பகத்தில் வசிக்கும் முதியவர்கள் மற்றும் மாணவர்களுக்கு அறுசுவை மதிய பிரியாணி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.15வது வட்டச் செயலாளர் கே. அங்குசாமி தலைமையில், எஸ். கோபாலகிருஷ்ணன், இ.எம். மனோகரன்,தசரதன், புஷ்பராஜ் ,அப்துல் சமது உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

# தமிழ்நாட்டில் மேலும் 17 கிராம பசுமைக் காடுகள் உருவாக்கம்!

சென்னை, மார்ச் 7 -

வனத்துறை அமைச்சர் அவர்களால் 100 மரகதப்பூஞ்சோலைகள் (கிராம மரப்பூங்காக்கள்) உருவாக்குதல் என்ற திட்டம் 202223ம் ஆண்டில் சட்டமன்றத்தில் அறிவிப்பாக வெளியிடப்பட்டது. இத்திட்டத்தின் நோக்கம், உள்ளூர் மக்கள் அன்றாட தேவைகளான தடிமரம், விறகு மரம் கால்நடை தீவனம் ஆகிய தேவைகளுக்காக வனங்களைச் சார்ந்து இருப்பதை குறைத்தல் ஆகும். உள்ளூர் மக்களை ஈடுபடுத்துவதன் மூலம் மாநிலத்தின் பசுமைப் பரப்பை மேம்படுத்துதல் மற்றும் அவர்களுக்கான மாற்று வருவாய் ஏற்படுத்துதல் ஆகும். அதன்படி அரசாணை (நிலை) எண் 146, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, நாள். 24.08.2022 தேதியில் ரூ.25 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வெளியிடப்பட்டது.

மரகதப்பூங்காக்கள் உள்ளூர் மக்களுக்குத் தேவையான இயற்கை வளங்களை வழங்குவதில் முக்கிய பங்கு வகிப்பதுடன் அதன் மூலம் காடுகளின் மீதான உயிரின தாக்கத்தினை குறைக்கிறது. மரகதப்பூஞ்சோலைகள் மாநில அரசின் தனித்துவமான முன்னெடுப்பாக திகழ்வதுடன் கிராம மக்களுக்கு ஒரு பொழுது போக்கு இடமாகவும், கிராமங்களுக்கு எதிர்வரும் காலங்களில் தண்ணீர் மற்றும் காலநிலை பாதுகாப்பு கிடைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

மாநில அரசினால் ஏற்கனவே 83 மரகதப்பூஞ்சோலைகள் அமைக்க இரண்டு கட்டமாக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 75 மரகதப்பூஞ்சோலைகள் 29 மாவட்டங்களில் அமைக்கும் பணிகள் முற்றிலும் நிறைவு பெற்று 14.08.2024 தேதியன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மேலும் 8 மரகதப்பூஞ்சோலைகளிலும் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது.

ஒவ்வொரு மரகதப் பூஞ்சோலையும், 1 ஹெக்டேர் பரப்பில் உருவாக்கம் செய்யப்பட்டு அதில் பாதுகாப்பு வேலி, அலங்கார வளைவுடன் கூடிய நுழைவாயில் கதவு, நிரந்தர பார்வையாளர் கூடாரம், நடைபாதை, ஆழ்துளை கிணறு, சாய்வு மேசைகள் மற்றும் இதர அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தடிமரம், எரிபொருள், தீவனம், காய்/கனி ஆகியவைகளை தரும் நாட்டு இன மரங்களாகிய நாவல், நெல்லி, நீர்மருது, பாதாம், புளி, வில்வம், கொய்யா, செஞ்சந்தனம், பலா, மகிழம், புன்னை, மா, வேம்பு ஆகியவை அனைத்து மரகதப் பூஞ்சோலைகளிலும் நடவு செய்யப்பட்டுள்ளன.

தற்போது, மேலும் 17 மரகதப்பூஞ்சோலைகள் 5 மாவட்டங்களில் மொத்தம் ரூ.425 இலட்சம் செலவில் மேற்கொள்ள மாநில அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த மரகதப்பூஞ்சோலைகள் திண்டுக்கல் (5), பெரம்பலூர்(4), கள்ளக்குறிச்சி (3), திருப்பத்தூர் (3) மற்றும் திருவண்ணாமலை (2) ஆகிய மாவட்டங்களில் உருவாக்கப்படுவதன் மூலம் தமிழகத்திற்கு மொத்தம் 100 மரகதப்பூஞ்சோலைகள் கிடைக்கப்பெறும்.



தாம்பரம் மாநகர வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் இரா.செல்வகுமாரின் தாயார் பெருங்களத்தூர் வடக்கு பகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் செ.செல்வபிரகாஷ் தாம்பரம் மாநகர தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ்.மகேஷ் அவர்களின் பாட்டி ஆர்.தனம்மாள் அவர்கள் படத்திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி எம்எல்ஏ., அவர்கள் கலந்து கொண்டு மலர் தூவி வணங்கினார். உடன் மண்டல குழுத்தலைவர்கள் ஜோசப் அண்ணாதுரை, டி.காமராஜ், எஸ்.இந்திரன், மற்றும் சிட்லபாக்கம் மனோகரன், பல்லாவரம் ரமேஷ், சதீஷ், மற்றும் கழக தோழர்கள் கலந்து மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.